**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு, செப்டம்பர் 2021**
**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளல்**
**மறுகூட்டல் (RT-II) / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**
**செய்திக் குறிப்பு**

செப்டம்பர் 2021, மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **01.12.2021 அன்று காலை 11.00 மணி** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று **HSE First Year Supplementary Exam, September 2021 - Scan Copy Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து, தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு, மறுகூட்டல் (RT-II) அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் இதே இணையதள முகவரியில் **HR SEC FIRST YEAR SEP 2021 - APPLICATION FOR RE-TOTALLING - II** அல்லது **HR SEC FIRST YEAR SEP 2021 - APPLICATION FOR REVALUATION** என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பப் படிவத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து **02.12.2021 (வியாழக் கிழமை) காலை 10.00 மணி முதல் 03.12.2021 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் சென்று மறுகூட்டல் (RT-II) / மறுமதிப்பீட்டிற்குரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**மறுகூட்டல்** (RT-II)

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | ரூ. 305/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ. 205/– |

**மறுமதிப்பீடு**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ.505/– |

ஒம்/–
**இயக்குநர்**

**நாள்:** 30.11.2021
**இடம்:** சென்னை – 6